# குரு லிங்க சங்கம வழிப்பாடு




தொகுப்பு:- ர.கோகிலதர்ஷனி

கே/ தெஹி/பூனுகல.த.ம.வி-எட்டியாந்தோட்டை

- ஆன்ம விடுதலைக்காக சைவம் பல மார்க்கங்களை கொண்டுள்ளது. அவற்றில் ஒன்றே குரு லிங்க சங்கம வழிப்பாடு ஆகும்.


1. **குரு வழிப்பாடு என்பது,**
    - சமய சாத்திரங்களை போதிப்பவர், சமயாசார கிரியைகள் செய்பவர், ஆன்மிகத்துறையில் சந்தேகங்களை போக்கி நல்வழிப்படுத்தும் வழிக்காட்டியாக திகழ்பவர்கள் குரு ஆவார். இவர்களை மனிதரென கருதாது சிவனே எனக் கருதி வழிப்படுதல் குரு வழிப்பாடு ஆகும்.

    (குரு:- அஞ்ஞானத்தை போக்கி மெஞ்ஞானத்தை உணர்த்துபவர் எனப்பொருள்.

- **குரு வழிப்பாடு செய்யும் முறை**
    - குருவை உள்ளன்போடு வழிப்படுதல்.
    - மனம் வாக்கு காயம் மூன்றினாலும் வழிப்படுதல்.
    - சமய,சந்தான குரவர்களின் குருபூசைத்தினங்களை கொண்டாடுதல்.

## 1. குரு வழிப்பாடின் மூலமாக வீடுபேறு அடைந்த நாயன்மார்.

திருமூலர்
மங்கையற்கரசியார்
குலச்சிறையார்
அப்பூதியடிகள்









## 2. இலிங்க வழிப்பாடு என்பது,

*திருக்கோவில்களுள் காணப்படும் விக்கிரகங்களுள் சிவலிங்கமே முதன்மையானது.


* சிவலிங்கத்தின் அடிபாகத்தில் உடுக்கு போன்ற பீடத்திற்கு **ஆவுடையார்** என்பர்.அதன் மேற்பாகத்தில் உருண்டு நீண்ட முனையற்ற தண்டு போல் காணப்படுவது பாணம் அல்லது **லிங்கம்** எனப்பொருள்.



(லிங்கம்:- லி-ஒடுங்குதல், கம்-தோன்றுதல்)

☀ .சிவலிங்கத்தை வழிப்படுதல் லிங்க வழிப்பாடு ஆகும்.

*.சரியை,கிரியை,யோகம், ஞானம் எனும் எந்த மார்க்கத்தை கடைப்பிடிப்பவரும் அவரவருக்கு ஏற்ப இலிங்க வழிப்பாடு செய்யலாம்.



# 2.இலிங்க வழிப்பாட்டின் மூலம் வீடுபேறு அடைந்த நாயன்மார்.


சேரமான் பெருமாள்

கலிங்காமர்

சாக்கிய நாயனார்

பூசலார்









## 3.**சங்கம வழிப்பாடு என்பது,**

* சிவனிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோர் **சிவனடியார்** எனப்படுவர்

* சிவனடியார்களின் திருக்கூட்டம் **சங்கமம்** எனப்படும்.அவர்களை சிவவடிவமாகவும் அவர்களின் செயல்களை சிவசெயலாகவும் கருதி அவர்களுக்குரிய சேவையை செய்து வழிப்படுதல் **சங்கம வழிப்பாடாகும்.**



(சிவனடியார்க்கு செய்யும் சேவை மனத்தூய்மையை தரும்)

# 3. சங்கம வழிப்பாட்டில் வீடுபேறு அடைந்த . நாயன்மார்.

திருநீலக்கண்டர்

இயற்பகையார்

சிறுத்தொண்டர்

இளையான்குடிமாறனார்





- மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

